**வகுப்பு - 7 - பருவம் - 2 - குடிமையியல்　வகுப்பு - 8 - குடிமையியல்**

**2, 1. மாநில அரசு, மாநில அரசு எவ்வாறு செயல்படுகிறது?**

71. இவற்றில் ஆளுநரால் நியமிக்கப்படாத பணியிடம் எது?

(1) அரசுத் தலைமை வழக்குரைஞர்

(2) அரசுப் பணியாளர் தேர்வாணையத் தலைவர்

(3) மாநிலத் தலைமைத் தேர்தல் ஆணையர்

(4) வட்டாட்சியர்

72. கூற்று 1: ஆளுநருக்கு அவசரநிலைச் சட்டத்தைப் பிறப்பிக்கும் அதிகாரம் உண்டு.

கூற்று 2: மாநில அரசின் எதிர்பாரா செலவின நிதி முதலமைச்சரின் கட்டுப்பாட்டில் இருக்கும்.

(1) கூற்று 1 மட்டும் சரி　(2) கூற்று 2 மட்டும் சரி

(3) இரண்டும் சரி　(4) இரண்டும் தவறு

73. இவற்றில் எது முதலமைச்சரின் கடமை அன்று?

(1) மாநில அரசின் கொள்கைகளை உருவாக்குதல்.

(2) பல்வேறு துறைகளைக் கண்காணித்து ஆலோசனை வழங்குதல்.

(3) மத்திய அரசு மற்றும் மாநில அரசிற்கிடையே உறவைப் பராமரித்தல்.

(4) மாநில உயர் அதிகாரிகளை நியமிக்க ஆளுநருக்கு ஆலோசனை வழங்குதல்.

74. கீழ்க்கண்டவற்றுள் தவறானதைத் தேர்ந்தெடு.

(a) சட்டமன்ற மேலவையில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் சட்ட மன்ற உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

(b) பன்னிரெண்டில் ஒரு பங்கு உறுப்பினர்கள் பட்டதாரிகளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

(c) ஆறில் ஒரு பங்கு உறுப்பினர்கள் மாநில முதலமைச்சரால் நியமனம் செய்யப்படுகின்றனர்.

LIVEWORKSHEETS

(d) சட்டமன்ற மேலவை உறுப்பினர்களின் பதவிக்காலம் ஆறு ஆண்டுகளாகும்..

(1) a மற்றும் b (2) c மற்றும் d (3) c மட்டும் (4) a மற்றும் d

75. அரசியலமைப்புச் சட்டப்படி சட்டமேலவை மற்றும் சட்டப்பேரவையில் இருக்கவேண்டிய குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை ______, ______.

(1) 40, 60 (2) 60, 40

(3) 60, மூன்றில் ஒரு பங்கு (4) 40, 500

76. ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவையில் 450 உறுப்பினர்கள் இருப்பார்களானால், அம்மாநில சட்டமேலவையில் இருக்க வேண்டிய அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை ______.

(1) 225 (2) 226 (3) 150 (4) 450

77. அரசியலமைப்புச் சட்டப்படி, ஒரு மாநிலத்தின் சட்டப்பேரவையில் இருக்க வேண்டிய அதிகபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கை ______.

(1) 234 (2) 500 (3) 545 (4) 250

78. கீழ்க்கண்டவற்றில் எது தவறான கூற்று?

(1) மாநிலத்தின் சட்டமன்றம், அரசியலமைப்பைத் திருத்தும் சில நேர்வுகளில் பங்கெடுக்கிறது.

(2) உயர்நீதிமன்றம், வழக்குகள் பற்றிய பதிவேடுகளின் ஆதாரச் சான்றாக உள்ள பதிவுறு நீதிமன்றமாக விளங்குகிறது.

(3) சட்டங்களை நடைமுறைப்படுத்துவது அமைச்சரவையின் பணியாகும்.

(4) உயர் நீதிமன்றம், அமைச்சரவையின் மீது கட்டுப்பாட்டினைச் செலுத்துகிறது.

79. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆராய்க.

i. அங்கீகரிக்கப்படாத கட்சியின் வேட்பாளர்கள் சுயேட்சை வேட்பாளர்கள் என அழைக்கப்படுகின்றனர்.

ii. சட்டமன்ற அனுமதி இல்லாமல் மாநில அரசு வரி விதிக்க இயலாது.

iii. மாநிலத்தின் நிதியைக் கட்டுப்படுத்தும் அமைப்பு உயர் நீதிமன்றம்.

LIVEWORKSHEETS

(1) ii சரி மற்றவை தவறு (2) i தவிர அனைத்தும் சரி

(3) அனைத்தும் தவறு (4) iii தவறு i, ii சரி

80. தமிழ்நாட்டின் தற்போதைய ஆளுநர் ______.

(1) திரு.பன்வாரிலால் புரோகித் (2) திரு.R.N.ரவி

(3) திரு.ராம்நாத் கோவிந்த் (4) வெங்கையா நாயுடு

81. தமிழ்நாட்டின் தற்போதைய முதலமைச்சர் ______.

(1) திரு.மு.க.ஸ்டாலின் (2) திரு.உதயநிதி ஸ்டாலின்

(3) திரு.K.பழனிச்சாமி (4) திரு. ஓ.பன்னீர் செல்வம்

82. சென்னை உயர் நீதிமன்றத்தின் தற்போதைய தலைமை நீதிபதி ______.

(1) திரு.மீனா குமாரி (2) திரு.கிருபாகரன்

(3) திரு. H.A. பாப்டே (4) திரு.சஞ்சீப் பானர்ஜி

83. தமிழ்நாட்டின் தற்போதைய சபாநாயகர் ______.

(1) திரு.மு.அப்பாவு (2) திரு.D.ஜெயக்குமர்

(3) திரு.ப.தனபால் (4) திரு.அன்பில் மகேஷ் பொய்யாமொழி

LIVEWORKSHEETS